# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| RLTOP.No. | 1/2023 | சாட்சி | ம.சா.1 |
|---|---|---|---|
| பெயர் | ராமசாமி | நாள் | 21.03.2025 |
| தகப்பனார் பெயர் | கந்தகவுண்டர் | | |

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

7) என் முதல் விசாரணை சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் எனக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 21.08.2015ம் தேதியில் ஏற்பட்ட பெயரளவிலான எழுத்துபூர்வமான வாடகை ஒப்பந்த அடிப்படையில் நான் மனு சொத்தை வாடகைக்கு விட்டதாக சொல்லும் நிலையில், அவ்வாறு எழுத்துப்பூர்வ ஒப்பந்தம் எதையேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன்.

8) இவ்வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் யார் என்றால், தனி அலுவலர் ஆவார். நான் ஒப்பந்தம் செய்த சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் நங்கவள்ளி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தை நிர்வகித்தாரா என்றால், இல்லை. அப்போது சங்கத்தின் நிர்வாக குழு இருந்தது. நான் சங்க செயலாளருடன் தான் ஒப்பந்தம் செய்துகொண்டேன். அவ்வாறெனில் என் முதல் விசாரணை சாட்சியத்தில் 1ம் எதிர்மனுதாரருடன் நான் ஒப்பந்தம் செய்து கொண்டதாக சொல்லியுள்ளது தவறானது என்றால், சரிதான். நான் தனி அலுவலருடன் ஒப்பந்தம் போடவில்லை.

9) நான் சொல்வது போல் முதலில் ரூ.6,000/-க்கு எழுத்துப்பூர்வ வாடகை ஒப்பந்தம் செய்து கொண்டதாகவும், பின்னிட்டு, வாடகை வாய்மொழியாக ரூ.10,000/-ஆக நிர்ணயிக்கப்பட்டதாகவும் நான் சொல்லும் சங்கதிகள் அடிப்படை ஆதாரமற்றவை என்றாலும், என் வாதப்படியே நான் எழுத்துப்பூர்வமாக அல்லாத வாடகையை பெற உரிமையற்றவர் என்றாலும், சரியல்ல. பொதுவாக கூட்டுறவு சங்கத்திற்கு கட்டிடம் வாடகைக்கு எடுக்க வேண்டும் என்றால், பொதுப்பணித்துறையின் அனுமதி பெற்று, கட்டிட அளவு மற்றும் அதற்கான வாடகையை மதிப்பீடு செய்து, அதன்பேரில் தான் வாடகைக்கு எடுக்க முடியும் என்றால், சரியல்ல. கூட்டுறவு சங்கத்தை பொறுத்தவரை

அதன் நிர்வாக குழுவே தீர்மானம் போட்டு, அதனடிப்படையில் வாடகை நிர்ணயிக்கலாம்.

10) நான் சொல்வது தவறானது என்றாலும், எந்த இடத்தில் சங்கத்தை நிறுவுவது என்பதை தீர்மானிப்பது தான் மேற்படி குழுவின் பணியே அன்றி, கட்டிடத்தை வாடகைக்கு எடுக்கவேண்டும் என்றால், கட்டாயம் பொதுப்பணித்துறையின் அனுமதி பெறாமல் எடுக்க இயலாது என்றால், சரியல்ல. என் முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கையில் நான் அனைத்து நடவடிக்கைகளையும் நான் 1ம் எதிர்மனுதாரருடன் செய்துள்ளதாக சொல்லியுள்ளது என் வழக்கிற்கே முரணாக உள்ளது என்றால், சரியல்ல.

(1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஓம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.